## சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: மக்களோடு மக்களாய் களத்தில் நின்று

# திட்டமிட்டு உழைத்து வெற்றியை நிலை நாட்டுவோம்!

### மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிகள் குறித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில்

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**மதுராந்தகம், செப்.22-**

**சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மக்களோடு மக்களாய் களத்தில் நின்று, திட்டமிட்டு உழைத்து, வெற்றியை நிலை நாட்டுவோம்! என்று மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிகள் குறித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றுகையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

மதுராந்தகம் இடைத்தேர்தல்... இந்தச் சட்டமன்றத் தொகுதியின் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

**10 ஆண்டுகளுக்கு முன் திறந்த அதே அரங்கத்தில் சந்திக்கிறேன்!**

இந்நிகழ்ச்சியில் கழகத்தின் கிளைச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். அதேபோல இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். இந்த அரங்கத்தைப் பத்து வருடங்களுக்கு முன்பு திறந்து வைத்தது நான்தான் என்று இங்கு வந்தவுடனே எனக்குச் சொன்னார்கள். அதே அரங்கத்தில், நம் இளைஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கிட்டத்தட்ட 1,500 பேரை ஒரே இடத்தில் சந்திப்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது.

நாம் அனைவரும் பலமுறை சந்தித்திருக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரையும் நான் தனித்தனியாகச் சந்தித்திருக்கிறேன், குழுவாகச் சந்தித்திருக்கிறோம், புகைப்படம் எடுத்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு ஒரு வித்தியாசமான சூழ்நிலையில், மிக முக்கியமான ஒரு சூழ்நிலையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

வருகின்ற 6-ஆம் தேதி மதுராந்தகம் சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்த இடைத்தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றி பெற வேண்டும், வெற்றி பெறப் போவது உறுதி என்பதைச் சொல்கின்ற வகையில் எழுச்சியோடு இங்கு கூடியிருக்கிறீர்கள்.

அதற்காகத்தான் நம் வெற்றி வேட்பாளர் திரு. பரந்தாமன் அவர்களை, நம் தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். உங்கள் மீது இருக்கின்ற தைரியத்தில், தலைவர் அவர்கள் உங்களிடத்தில் பரந்தாமன் அவர்களை ஒப்படைத்திருக்கிறார்கள். எப்படியும் நீங்கள் நிச்சயம் வெற்றியைத் தேடித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு, நானும் நம் கழகத்தின் அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும், நிர்வாகிகளும் இங்கு அனைவரும் ஒன்றாக அந்த உணர்வோடு கூடியிருக்கி றோம்.

**அடுத்த 16 நாட்கள் களப்பணி**

மிகவும் முக்கியமான தருணத்தில் தலைவர் அவர்கள் என்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். தேர்தலுக்கு இன்னும் சரியாக 16 நாட்கள் இருக்கின்றன. வெற்றி என்பது சுலபம் கிடையாது. வெற்றி என்பது உறுதி, ஆனால், எப்படி அது உறுதியாகும் என்றால், அடுத்த 16 நாட்கள் நாம் அனைவரும் என்ன களப்பணி செய்யப் போகிறோம் என்பதைப் பொறுத்து, அந்த வெற்றி நிச்சயம் உறுதியாக்கப்படும்.



முதலில் சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள். எதற்காக இந்த இடைத்தேர்தல் வந்தது? இது சாதாரணமாக வந்த இடைத்தேர்தலா? இது இயல்பாக நடந்த, நடக்கக்கூடிய ஒரு இடைத்தேர்தலா? இல்லை. இது ஒரு திணிக்கப்பட்ட தேர்தல். ஆளுங்கட்சியின் குதிரைபேர அரசியலால், இங்கே ஏற்கனவே வெற்றி பெற்ற வேட்பாளர் ஆளுங்கட்சியிடம் விலை போன காரணத்தினால், இன்றைக்கு மதுராந்தகத்தில் இந்த ஒரு இடைத்தேர்தல், மதுராந்தகத்தில் மட்டும் கிடையாது, இனி தாராபுரத்திலும் சேர்த்து இந்த இடைத்தேர்தல் உங்கள் மீது, நம் மீது, இந்த மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் 24-ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் நடந்தது. மே 4-ஆம் தேதி அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. தேர்தலில், இந்த ஆளுங்கட்சி, இங்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சி பெரும்பான்மைக்கு 118 இடங்களை வெல்ல வேண்டும். வென்றார்களா? வெற்றி பெறவில்லை. வெறும் 107 இடங்களில் வென்றார்கள். அறுதிப் பெரும்பான்மையோடு இந்த ஆட்சி அமைந்திருக்கிறதா என்று கேட்டால் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் நமக்கும் இங்கு அமைந்திருக்கக்கூடிய ஆளுங்கட்சிக்கும் வாக்கு வித்தியாசம் பார்த்தால் வெறும் 17 லட்சம் வாக்குகள் வித்தியாசம்தான்.

இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய உடன்பிறப்புகளின் உழைப்பால், நம் தலைவர் பெயரைச் சொல்லி, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எல்லாம் சொல்லி, மக்களிடத்தில் சென்று வாக்கு பெற்று வெற்றி பெற்ற அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியால் தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நம் தயவில்தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**எப்படி இந்த 'சோஃபா மாடல்' ஆட்சி அமைந்தது?**

நம்மோடு கூட்டணி அமைத்தவர்கள் ஒவ்வொருவராகச் சென்றார்கள். நம்மிடம் என்ன சொல்லிவிட்டுச் சென்றார்கள், மக்களிடத்தில் என்ன சொல்லிவிட்டுச் சென்றார்கள்? குடியரசுத் தலைவர் ஆட்சி அமைந்துவிடக் கூடாது, குடியரசுத் தலைவர் ஆட்சி அமைவதன் மூலமாக ஆளுநரின் ஆட்சி இங்கு வந்துவிடக் கூடாது என்று நம் தலைவரிடம் சொல்லிவிட்டுச் சென்றார்கள். சிலர் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போய்விட்டார்கள்; ஒரே இரவில், திருட்டுதனமாக. நான் யாரைச் சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு அவர்களின் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஏனெனில் இவர் நேரடியாகப் பிரதம மந்திரி பதவி வேட்பாளருக்கே சென்றுவிட்டார். திரும்பச் சேர்த்தால் நீங்களா விட்டுவிடுவீர்களா? எப்படி இந்த ஆட்சி அமைந்தது? அன்று அனைத்தும் தொலைக்காட்சியில் நேரலையாக வந்தன.

அன்றைக்கு நாம் சொன்னோம் அல்லவா, சோஃபா மாடல் அரசு என்று. இப்போது சோஃபா மாடல் ஆட்சி என்று எல்லாருமே சொல்கிறார்கள். இன்றைக்கு அந்தக் கட்சித் தலைவர்களே சொல்கிறார்கள்; நம்மோடு கூட்டணி வைத்திருந்தார்களே அந்தத் தலைவரே சொல்கிறார், ஏன், சோஃபா மாடல் அரசு என்று சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்று. ஒரு சோஃபா வந்தது, நாங்கள் முன்னரே பதிவு செய்திருந்தோம். அது எப்படிச் சரியாக வாக்கு எண்ணிக்கை முடிந்து முதலமைச்சர் வருவதற்குப் பத்து நிமிடங்கள் முன்பு வந்தது அந்த சோஃபா? எல்லாக் கட்சி அலுவலகங்களுக்கும் பார்த்தால், ஒரே மாதிரியான சோஃபா. எல்லோரும் ஒரே இடத்தில் வாங்கியிருக்கிறார்கள் போலும். ஒரே நிறுவனம். அளவுகள் வேறாக இருக்கலாம்.

சிலருக்கு மூன்று இருக்கைகள், சிலருக்கு ஐந்து இருக்கைகள், சிலருக்கு ஒற்றை இருக்கை. பாவம், சிலருக்கு சோஃபா போகவில்லை. அது என்ன ரகசியம் என்று நமக்குத் தெரியாது. ஏனெனில், அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் 'நாங்கள் தி.மு.க.வுடன்தான் இருக்கிறோம்' என்று சொல்லிவிட்டார்கள். அந்த எரிச்சலில் சிலர், இன்றைக்குக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

> **எதற்காக இந்த இடைத்தேர்தல் வந்தது? இது சாதாரணமாக வந்த இடைத்தேர்தலா?**
>
> **எதற்காக இந்த இடைத்தேர்தல் வந்தது? இது சாதாரணமாக வந்த இடைத்தேர்தலா? இது இயல்பாக நடந்த, நடக்கக்கூடிய ஒரு இடைத்தேர்தலா? இல்லை, இது ஒரு திணிக்கப்பட்ட தேர்தல், ஆளுங்கட்சியின் குதிரைபேர அரசியலால், இங்கே ஏற்கனவே வெற்றி பெற்ற வேட்பாளர் ஆளுங்கட்சியிடம் விலை போன காரணத்தினால், இன்றைக்கு மதுராந்தகத்தில் இந்த ஒரு இடைத்தேர்தல், மதுராந்தகத்தில் மட்டும் கிடையாது, இனி தாராபுரத்திலும் சேர்த்து இந்த இடைத்தேர்தல் உங்கள் மீது, நம் மீது, இந்த மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.**

அது யார் என்று தெரியும், உங்களுக்கும் தெரியும். இப்படி ஒவ்வொரு கட்சி அலுவலகத்துக்கும் சோஃபா அனுப்பி, இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்துக்குக்கூட அந்த அளவு வீட்டை விட்டு வெளியே வரவில்லை. ஆனால், தினமும் மாலையானால் சென்று ஆளுநர் மாளிகையைப் பார்த்துக் கொண்டே இருந்தார். வீட்டை விட்டு நாள்தோறும் வெளியே வந்தார், பிரச்சாரத்துக்குக்கூட அவர் அவ்வளவு செல்லவில்லை.

**தீர்ந்துபோன சக்தி–'காஞ்சி போன சக்தி'**

மே 10-ஆம் தேதி அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பிறகு, மே 13-ஆம் தேதி சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. ஆனால், அதற்கு முன்னரே தெரிந்துவிட்டது, அ.தி.மு.க.வை கிட்டத்தட்ட இரண்டாகப் பிளந்து அதில் ஒரு குழு அவர்களுக்கு ஆதரவு அளிக்கப் போவதாக முடிவெடுத்துவிட்டார்கள். அவர்களுக்கு அமைச்சர் பதவி தருகிறோம், இன்னும் பெரிய சோஃபா அனுப்புகிறோம் என்று பொய் வாக்குறுதிகள் எல்லாம் கொடுத்திருந்தனர். அதேபோல நம் கூட்டணிக் கட்சிகள் என்னென்ன காரணங்கள் எல்லாம் சொன்னார்களோ அவற்றையெல்லாம் சொல்லி, அ.தி.மு.க.வை கிட்டத்தட்ட பிளவுபடுத்தி 25 சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு ஆதரவு அளித்தார்கள்.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கும்போது இதை நான் சட்டமன்றத்தில் பேசினேன். எதிர்க்கட்சித் தலைவராக நான் பேசினேன், இதனைப் பதிவு செய்திருக்கிறேன். எப்படி இருந்தாலும் நீங்கள் ஆட்சிக்கு வந்துவிடுவீர்கள், உங்களிடத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடையாது. எங்களுடைய கூட்டணிக் கட்சிகளால்தான் நீங்கள் இன்றைக்கு ஆட்சி அமைத்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, எங்களைப் பார்த்துத் `தீய சக்தி' என்று சொன்னீர்கள், அவர்களைப் பார்த்து,`தீர்ந்து போன சக்தி' என்று சொன்னீர்கள். இன்றைக்குத் தீர்ந்துபோன சக்தியிடமிருந்து பிரித்து அவர்களைத் திருடி வருகின்ற அளவிற்கு `காஞ்சிபோன சக்தி'யாக நீங்கள் இருக்கிறீர்கள்.

அ.தி.மு.க-வை இரண்டாகப் பிளந்துவிட்டீர்கள், அவர்களில் சிலர், உங்களுக்கு வாக்களிக்கப் போகிறார்கள், அதையும் இன்றைக்கு இந்த நாடு பார்க்கத்தான் போகிறது. அதனால் இந்தக் கொடுமைகளை எல்லாம் பார்க்க, நாங்கள் உள்ளே இருக்கப் போவதில்லை, திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்யும் என்று கூறி, நாங்கள் வெளிநடப்பு செய்தோம். அதன் பிறகு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

அ.தி.மு.க-வின் பொதுச்செயலாளர் அவர்களைக் கட்சியை விட்டு நீக்கினார். கொறடா என்ன சொல்கிறாரோ, அதைத்தான் கேட்க வேண்டும், அதை மீறித்தான் வாக்களித்தார்கள். அதனால் தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பிறகு சட்டப் போராட்டங்கள் நடக்கின்றன, இன்றைக்கு அனைவரும் 'மீண்டும் எங்களை எப்படியாவது கட்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள், தெரியாமல் வாக்களித்துவிட்டோம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில்தான் அ.தி.மு.க. சார்பாக ஆதரவளித்த இந்தத் தொகுதியின் வேட்பாளர், சட்டமன்ற உறுப்பினர், அன்றைய சட்டமன்ற உறுப்பினர் வாக்கு எண்ணிக்கை மே 4, சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்தது

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்

---

### தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு - 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள்!

# சட்டம் - ஒழுங்கு சீரழிவு: அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி!

சென்னை, செப். 22–

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு உள்ளது. மேலும் 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள் காரணமாக சட்டம் –ஒழுங்கு சீரழிந்துள்ளது. எனவே அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் பொதுமக்களிடையே மிகப்பெரிய அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மதுரையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகே ஒருவர் நடுரோட்டில் விரட்டிச் சென்று வெட்டி படுகொலை, கிருஷ்ணகிரி அருகே டாஸ்மாக் கடையுடன் தொடர்புடைய இடத்தில் ஏற்பட்ட தகராறில் 33 வயது இளைஞர் கல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த படுகொலைகளுக்கும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்ததற்கும் அரசு என்ன பதிலளிக்கிறது.



நெய்வேலி என்.எல்.சி. திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அரசு முதலில் உறுதி செய்ய வேண்டும். முதலில் ஏற்கனவே நிலம் வழங்கிய மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அதன் பின்னரே புதிய விளைநிலங்களை கையகப்படுத்துவது குறித்து பேசுங்கள்.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகளும், உயிரிழப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, அரசு வெறும் அறிவிப்புகளோடு நிற்காமல், களத்தில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருச்சி மாவட்டத்தில் ரூ.247.15 கோடி பயிர்க்கடன் 50,779 விவசாயி களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், முழுமையான கடன் தள்ளுபடியே தங்களது கோரிக்கை என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

**மீனவர்கள் மத்தியில் அச்சமும் - எதிர்ப்பும்!**

சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் தொடர்பான அறிவிப்பு குறித்து மீனவர்கள் மத்தியில் அச்சமும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியின் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை அரசு உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும். கர்நாடக அரசை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் விவசாயிகள் நலன் கருதி வலியுறுத்துவாரா?

**இன்றைய தமிழ்நாட்டின் மக்கள் கதி என்ன?**


தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பாதிப்பால் ஒருபுறம், டெங்குவால் பொதுமக்கள் பாதிப்பு ஒருபுறம், கொசு கடியால் மக்கள் அவதி ஒருபுறம், இந்த நிலையில் இன்றைய தமிழ்நாடு, மக்கள் கதி என்ன?. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் சின்னப்பரூர் மற்றும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யாததனால் மழையில் நனைந்து வீணாவதை அரசு எப்போது தடுக்கப் போகிறது?. இப்படி பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கு அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?. இல்லையெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இந்த அரசு என்று மக்கள் முடிவு செய்வார்கள்.

இவ்வாறு பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

# ஆண்டவன் சாட்சியாக



மின்வெட்டுக்கு
தீர்வு கேட்டா

பஞ்சாப்பை
பாருங்குது
ஒன்னு

ஆந்திராவை
கை காட்டுது
இன்னொன்னு..

அது சரி...

சோறாக்கும்
அரிசி விலை
ஆழாக்கிற்கு
பத்து ரூபா ஏறிடுச்சேன்னு
கேட்டா

"சோமாலியாவை
பாருன்னு"

அடுத்ததாக
ஒன்னு
அறிவாக
பேசும் பாரு...

ஆக...

லண்டனுக்கு
போய்வந்த
தண்டக்காரியம்
குறித்து

ஊடகத்தை
கூட்டிவச்சு
உலகுக்கு சொல்ல

ஒன்னுக்கும்
துப்பில்லை...

அரிசி பருப்பு
விலை எல்லாம்
ஆகாயம்
நோக்கி

ஆளத்
தெரியாத
மக்குகளால்

மாநிலத்தின்
வளர்ச்சி
பாதாளம் நோக்கி...

ஆறு கோடி
செலவு செஞ்சு

மேட்டூர்ல
சூட்டிங்
நடத்திய
காவேரித்தண்ணி
அடுத்த ஊரு
தாண்டுறதுக்குள்ள
ஆவியாகிப்
போச்சு...

படுகை விவசாயம்
பதராகி
உழுது நடாமலே
சாவியாப் போச்சு...

துருப்பிடுச்ச
வண்ணத்தில்
இந்த
துக்ளக் ஆட்சி

துயரங்கள்
தொடரவே

அன்றாடம்
நடக்கும்
ஆதாயக்
கொலைகளால்

சென்னை
முதல்
சிவகங்கை
வரை
சீரழியும்
காட்சி...

ஆக
மொத்தத்தில்

சீர் கெட்ட
பிளாக் டிக்கெட்
ஆட்சியால்

ஊர் கெட்டுக்
கிடப்பதற்கு

"பழனி மலை
முருகன்
முதல்

மாமதுரை
மீனாள்" வரை

அல்லாடும்
தெய்வங்களே

சத்தியமா
சாட்சி...

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*